நொய்யல் ஆற்றின் மேல் உள்ள பாலம்

*224 வினா—திரு. அ. மயில்சாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

கோயம்புத்தூருக்கும் பேரூருக்கும் இடையே, நொய்யல் ஆற்றின் மேல் உள்ள பாலத்தை, அகலப்படுத்தும் கருத்துரு ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : இல்லை.

திரு. அ. மயில்சாமி : இந்த இரண்டு ஊர்களுக்கும் இடையிலே இருக்கிற பாலம் குறுகியதாக இருக்கிறது. அன்றாடம் லாரிகளும் பஸ்களும் நூற்றுக் கணக்கில் இந்தப் பாலத்தின் வழியே செல்கின்றன. இந்தப் பகுதியில் ஒரு சிறு விபத்து ஏற்பட்டால் கூட, கோவை, பேரூர் போன்ற பகுதிகளுக்குப் போய் வர முடியாது. இப்பொழுது இல்லையென்றாலும், அடுத்த ஆண்டி லாவது இப்பாலம் அகலப்படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : 4.90 மீட்டர் அகலம் தான் இருக்கிறது. அதை 8 மீட்டர் அகலமாக ஆக்க வேண்டும் என்பது நம்முடைய நோக்கம். இப்பொழுது இல்லை. ஆனால் எதிர்காலத்தில் நிதிநிலைமைக்கு ஏற்ப நிச்சய மாக இது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : வினாக்கள் 225 மற்றும் 226 ஒத்தி வைக்கப்படுகின்றன.

26—4—1986 ஆம் தேதிய வினாப் பட்டியலிலிருந்து 3—5—1986 ஆம் நாளுக்கு ஒத்திப் போடப்பட்ட வினாக்கள் எண் 203 மற்றும் 204 ஒத்தி வைக்கப்படுகின்றன. வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS